**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 186/2022

**16.03.2026**

## P.W.1- திலகம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது பங்கை எனக்கு தெரியாமல் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. எனது பங்கை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எனக்கும், 1 முதல் 6 பிரதிவாதிகள் உறவுமுறை பற்றி சொல்லியது சரிதான். 7ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற நபர் என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள். 7ம் பிரதிவாதி மட்டும் தான் எதிர்வாதம் செய்கிறார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி தாக்கல் செய்ய எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேன். 7ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் 4வது இலக்க சொத்தில் 1 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து எதிர்வாதம் செய்கிறார் என்றால் சரிதான். தாவா 4வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனித்து கிரையப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 4வது இலக்க சொத்தை பேச்சியம்மாள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, எல்லோரும் சேர்ந்து தான் அனுபவம் செய்து வந்தோம். 4வது இலக்க சொத்தை எல்லோரும் சேர்ந்து அனுபவம் செய்து கொண்டோம் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 29.09.2010ல் 1ம் பிரதிவாதி, 7ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் எனக்கு திருமணத்தின்போது எனக்கு சீதனமாக கிடைத்த நகைகளை விற்ற பணத்தை கொண்டும், பால் மாடுகளை வளர்த்து அதன்மூலம் சம்பாதித்த பணத்தை கொண்டும், 27.07.1973ம் தேதியன்று எனக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்திலிருந்து தங்களுக்கு கிரையம் செய்து கொடுக்கிறேன் என குறிப்பிட்டு எழுதிக்கொடுள்ளார் என்றால் சரிதான். 13.10.2010ம் தேதிய 7ம் பிரதிவாதிக்கு, 1வது பிரதிவாதி தாவா 4வது இலக்க சொத்தில் 1 மற்றும் 3 அயிட்ட

சொத்துக்களையும், மீத உள்ள சொத்துக்களை பொறுத்து கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி அவ்வாறு கிரையம் பெற்றபிறகு அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 2010ம் ஆண்டே தாவா 4வது இலக்க சொத்தில் 1 மற்றும் 3வது அயிட்ட சொத்தை 7ம் பிரதிவாதி கிரையம் பெற்ற நாள்முதல் அனுபவம் செய்து வரும் விவரத்தை பிராதில் குறிப்பிட்ட கூறவில்லை என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி தாவா 4வது இலக்க சொத்தை பிளாட்டுகளாக பிரித்து கிரையம் கொடுத்தபோது தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் 2021 நவம்பர் மாதம் வழக்கு தாக்கல் செய்தேன். மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து 7ம் பிரதிவாதியின் கிரைய சொத்தை அபகரிக்க தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 18:19:15 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.